பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி சென்னை

**08 08 2025 7 15**

வெள்ளிக்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புதினுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொலைபேசி மூலம் பேச்சு நடத்தினார்.

**2.** அமெரிக்காவுடன் பாதுகாப்பு தளவாட கொள்முதல் தொடர்பான பேச்சுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை மத்திய அரசு மறுத்துள்ளது

**3.** மரக்காணம் – புதுச்சேரி இடையே நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதற்கு தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

**4.** பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தற்காலிகமாக மொபைல் ஃபோன் இணையதள சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**5.** அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Bhavinaben Patel** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<u>இனி விரிவான செய்திகள் –</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புதின் உடன் இன்று பேச்சு நடத்தினார்.

தொலைபேசி வாயிலாக நடைபெற்ற இந்த பேச்சு வார்த்தையின் போது உக்ரைனில் தற்போது நடைபெற்று வரும் சூழ்நிலை குறித்து ரஷ்ய அதிபர் பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

இருநாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா-ரஷ்யா இடையேயான வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்க வருமாறு ரஷ்ய அதிபருக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இருதலைவர்களும் விரிவாக விவாதித்தனர்.

>><><><><<

*பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்திற்கு திரு லாலு பிரசாத்தும், திரு ராகுல்காந்தியும் வாக்கு வங்கி அரசியலுக்காகவே எதிர்ப்பு தெரிவிப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குறை கூறியுள்ளார்.*

*பீகார் மாநிலம் Sitamarhi-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், ஊடுருவல்காரர்களுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர்கள் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு ஆட்சேபம் தெரிவிப்பதாக கூறினார்.*

*வாக்காளர் பட்டியல் சீரமைப்பு என்பது நேரு காலத்திலும் நடைபெற்றதாக கூறிய அவர், கடந்த 2003-ஆம் ஆண்டிலும் இதுபோன்ற திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்றார்.*

*ஆனால், அப்போதெல்லாம் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.*

*இந்திய குடியுரிமை இல்லாதவர்கள் வாக்களிக்க இயலாது என அரசியல் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதை திரு ராகுல்காந்தி அறிந்துகொள்ள வேண்டும் என்றும் திரு அமித் ஷா கூறினார்.*

**>><><><><<**

*வெளியுறவுத் துறையின் சார்பில் மாணவர் பயிற்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பெறப்படுவதாகவும், பதிவு செய்யும் அனைவருக்கும் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் அத்துறைக்கான அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு பதில் அளித்துள்ள அவர், மாணவர்களின் தகுதி அடிப்படையில் தேர்வு நடைமுறை இருக்கும் என்றும் பாலினம் மற்றும் மண்டல அளவிலான பிரதிநிதித்துவத்தை கருத்தில் கொண்டு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவதாகவும் கூறியுள்ளார்.*

*இதற்காக கல்வி நிறுவனங்கள் அல்லது மாவட்ட அதிகாரிகளுடன் எந்தவொரு முறையான கூட்டுறவும் வைத்துக்கொள்வதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*மாநிலங்கள் வாரியாக விண்ணப்பங்கள் பெறப்படுவதாகவும் தமிழ்நாட்டிலிருந்து 17 மாணவர்கள் பயிற்சிக்காக தேர்வு செய்யப்பட்டதாகவும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.*

**>><><><><<**

*நாடு முழுவதும் கடந்த மூன்றாண்டுகளில் SAMARTH திட்டத்தின்கீழ், 14 ஆயிரம் மகளிர் கைத்தறி நெசவாளர்கள் பயிற்சி பெற்றிருப்பதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு Pabitra Margherita தெரிவித்துள்ளார்.*

*மாநிலங்களவையில் இதனை தெரிவித்துள்ள அவர், அமிர்த பெருவிழாவின் ஒரு பகுதியாக, மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்கு பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் அதிகாரம் அளிக்கப்படுவதை அரசு உறுதி செய்திருப்பதாக கூறியுள்ளார்.*

தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு Pabitra Margherita கூறியுள்ளார்.

>><><><><<

அமெரிக்காவுடன் பாதுகாப்பு தளவாட கொள்முதல் தொடர்பான இந்தியாவின் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை பாதுகாப்பு அமைச்சகம் மறுத்துள்ளது.
இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அந்த செய்திகளில் உண்மையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்காவில் இருந்து பாதுகாப்புத் தளவாடங்களை வாங்குவது தொடர்பான பேச்சு வார்த்தை முன்னேற்றமான நிலையை எட்டியுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

>><><><><<

தற்போதுள்ள வருமானவரிச் சட்டத்திற்கு மாற்றாக மக்களவையில் கடந்த பிப்ரவரி மாதம் தாக்கல் செய்யப்பட்ட வருமானவரி மசோதாவை, மத்திய அரசு திரும்பப்பெற்றுள்ளது.

இந்த மசோதாவுக்கு பதிலாக, பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு Baijayant Jay Panda தலைமையிலான தேர்வுக்குழு அளித்த பரிந்துரைகளுடன் திருத்தப்பட்ட புதிய மசோதா வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மத்திய அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத்தொடர்ந்து மசோதா மீது விவாதம் நடத்தப்பட்டு, நிறைவேற்றப்படும் என தெரிகிறது.

>><><><><<

மரக்காணம் – புதுச்சேரி இடையே நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதற்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் 2 ஆயிரத்து 157 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த சாலை தரம் உயர்த்தப்படுவதால், தமிழகம் - புதுச்சேரி இடையேயான 46 கிலோமீட்டர் தொலைவிலான பயண நேரம் 1 மணி நேரத்திலிருந்து 35 நிமிடங்களாக குறையும் என்று கூறியுள்ளார்.
ஜிப்மர் மருத்துவமனை ஆரோவில் போன்ற பகுதிகளை எளிதில் இந்த சாலை இணைப்பதாகவும், இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிய பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு தமது நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் டாக்டர் எல் முருகன் குறிப்பிட்டுள்ளார்.

>><><><><<

தகவல், கல்வி மற்றும் பொழுதுபோக்குத் துறையில் விரிவான அணுகலை உறுதி செய்வதற்கு பிரசார் பாரதி செயல்பட்டு வருவதாக அதன் தலைமை செயல் அதிகாரி திரு Gaurav Dwivedi தெரிவித்துள்ளார்.
புதுதில்லியில் இன்று வேவ்ஸ் ஓடிடி தளத்தின் இதழ் பிரிவு தொடக்க விழா

வில் பங்கேற்று பேசிய அவர், நுழைவுக்கான தடையை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

ஆண்டுக்கு 999 ரூபாய் அல்லது மாதத்திற்கு 99 ரூபாய் கட்டணம் செலுத்தி பயனாளர்கள் இந்த சேவையை பெற முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் 8 மொழிகளில் 50 தலைப்புகளிலான சேவையை பயனாளர்கள் பெற முடியும் என்று திரு Gaurav Dwivedi குறிப்பிட்டார்.

>><><><><<

தக்காளி விலை உயர்வுக்கு உற்பத்திக்குறைவோ அல்லது அடிப்படை தேவைக்கும், வழங்கலுக்குமான ஏற்றத்தாழ்வோ காரணமல்ல என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நுகர்வோர் விவாகரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், வட மற்றும் வடமேற்கு மாநிலங்களில் பெய்துவரும் கனமழை காரணமாக தக்காளியின் விலை கிலோ ஒன்றுக்கு 73 ரூபாயாக அதிகரித்துள்ளது என கூறப்பட்டுள்ளது.

வானிலை தொடர்பான பாதிப்புகள் காரணமாகவே ஜூலை மாத இறுதியில் தக்காளி விலை உயர்ந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது.

எனினும், வரத்து அதிகரிக்கத் தொடங்கியதும் விலை குறையும் என்றும், கடந்த ஒருவார காலமாக தேசிய கூட்டுறவு நுகர்வோர் சம்மேளனத்தின் மூலம் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு குறைந்த விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

>><><><><<

மின்னணு வாக்காளர் பட்டியலை பல்வேறு மாநிலங்களின் தேர்தல் ஆணைய இணையதளத்திலிருந்து நீக்கிவிட்டதாக வெளியான தகவலை தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

இது தவறான செய்தி எனவும், சமூக வலைதளங்களில் பரவிவரும் அதுபோன்ற தகவல் உண்மையல்ல என்றும் தேர்தல் ஆணைய அறிக்கை தெரிவிக்கிறது.

நாடுமுழுவதும் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் எந்தவொரு வாக்காளர் பட்டியலையும் யார் வேண்டுமானாலும் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

>><><><><<

சீனாவின் Tianjin நகரில் வரும் 31 முதல் அடுத்த மாதம் 1 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்பதை அந்நாடு வரவேற்றுள்ளது.

சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் திரு **Guo Jiakun** கூறுகையில் **20** க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் இந்த உச்சிமாநாடு அந்நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பையும் நட்புறவையும் வெளிப்படுத்துவதாக அமையும் என்று தெரிவித்தார்.

>><><><><<

பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் மூன்றுவார காலத்திற்கு மொபைல் போன் இணையதள சேவைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

பிரிவினைவாத அமைப்புகளின் தகவல் பரிமாற்றத்தை தடுக்கும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

அண்மை காலமாக தீவிரவாதிகள், பாகிஸ்தான் ராணுவம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதால், இணையதள சேவை முடக்கப்பட்டிருப்பதாக பலுசிஸ்தான் மாகாண அரசு தெரிவித்துள்ளது.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Bhavinaben Patel** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------------

இலங்கை சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Aadhira Rajkumar** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **24-22, 23-21**, என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Lakshya Rajesh**-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Dhyan Santosh**-வும் கலப்பு இரட்டையர் பிரிவில் **Anjana – Niranjan** இணையும், **15** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் **Hamsini Chadaram** -ம் பட்டம் வென்றனர்.

**>> End of News <<**